முழுப் பதிப்புரிமையுடையது.

## இலங்கை கணக்கீட்டுத் தொழில்நுட்பவியலாளர் கழகம்

## மட்டம் III பரீட்சை – 2023 சனவரி

# (303) நிதிக் கட்டுப்பாடுகளும் கணக்காய்வும்

(Financial Controls & Audit)

2023-02-25
பிற்பகல்
[01.45 – 05.00]

- **பரீட்சார்த்திகளுக்கான அறிவுறுத்தல்கள் (**கவனமாக வாசிக்கவும்**):**

பக்கங்கள் : 07
வினாக்கள் : 09

(1) ***அனுமதிக்கப்பட்ட காலம் :*** *வாசிப்புக்கு* : 15 *நிமிடங்கள்*
*விடையெழுத* : 03 *மணித்தியாலங்கள்*

(2) ***சகல வினாக்களுக்கும் விடையளித்தல் வேண்டும்.***

(3) *வழங்கப்பட்டுள்ள* ***விடைப் புத்தகத்தில்*** *நீங்கள் விண்ணப்பித்த* ***மொழி மூலத்திலேயே விடைகள்*** *எழுதப்படல் வேண்டும்.*

(4) *சகல செய்முறைகளையும் கணிப்பீடுகளையும் சமர்ப்பிக்கவும். நீங்கள் ஏதேனும் எடுகோள்களை மேற்கொண்டிருப்பின் அவற்றைத் தெளிவாகக் குறிப்பிடவும்.*

(5) *நிரற்படுத்தப்படாத கணிப்பான்களின் பாவனை* ***மாத்திரம்*** *அனுமதிக்கப்பட்டுள்ளது.*

(6) ***செயல் வினைச் சொற்களின் செவ்வை நிரல்*** *அவற்றின்* ***வரைவிலக்கணங்களுடன்*** *இணைக்கப் பட்டுள்ளது. பரீட்சார்த்திகள் செயல் வினைச் சொல் செவ்வை நிரலில் தரப்பட்டுள்ள வரைவிலக்கணங்களின் அடிப்படையில் வினாக்களுக்கு விடையளித்தல் வேண்டும்.*

(7) *100 புள்ளிகள்.*

---

## பகுதி A

(மொத்தம் 20 புள்ளிகள்)

### வினா 01

**ABC PLC** இன் சபைக்கு ஒரு புதிய பணிப்பாளர் நியமிக்கப்பட்டுள்ளார். சபையின் செயலாளரால் நடத்தப்பட்ட அறிமுக நிகழ்வின்போது "*பங்குதாரர்கள் கம்பனியின் செயன்முகமையாக* (stewards) *இருப்பதனால் கம்பனி என்பது பங்குதாரர்களின் முகவராக இருக்கிறது*" எனச் செயலாளர் குறிப்பிட்டிருந்தார்.

**நீங்கள் செய்ய வேண்டியவை :**

(a) செயலாளரின் மேற்படி கூற்றுடன் நீங்கள் இணங்குகின்றீர்களா என்பதை காரணங்களுடன் **விபரிக்குக.**
(03 புள்ளிகள்)

(b) "நம்பிக்கைக்குரிய உறவு (fiduciary relationship)" என்னும் பதத்தினை **விபரிக்குக.** (02 புள்ளிகள்)
(மொத்தம் 05 புள்ளிகள்)

## வினா 02

**வரையறுக்கப்பட்ட மதரா தனியார் கம்பனி** சிறந்த தரக் குறியீட்டைக் கொண்ட ஆடைகளைத் தைத்து அதனை ஐரோப்பிய நாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதில் ஈடுபட்டுள்ளது. கம்பனியானது கடந்த 6 மாத காலப்பகுதியில் கீழ்வரும் இடர்களை எதிர்கொண்டிருந்தது :

(1) உச்ச உற்பத்தி நடைபெறும் நேரத்தில் இயந்திரம் பழுதடைதிருந்தது.

(2) நிதிக் கூற்றுகளில் வேண்டுமென்றே துல்லியமற்ற தகவல்கள் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

(3) வாடிக்கையாளர் உறவுப் பிரிவுக்கு இணைக்கப்பட்ட ஊழியர், நிறுவனத்தில் தாபிக்கப்பட்டுள்ள நடைமுறைகளுக்கு இணங்கப் பணியாற்றுவதற்குத் தவறியிருந்தார்.

(4) குறைந்த தரம் காரணமாக சில பொருள்களை வாடிக்கையாளர்கள் நிராகரித்திருந்தனர்.

(5) தொழிற்படு மூலதனத் தேவைக்கு நிதியிடுவதற்காக பெற்றுக் கொள்ளப்பட்ட கடனின் வட்டி வீதம் சடுதியாக அதிகரித்திருந்தது.

**நீங்கள் செய்ய வேண்டியது :**

மேற்படி ஒவ்வொரு இடரையும் வகைப்படுத்தக்கூடிய இடர் வகைகளை இனங்காண்பதுடன் இனங்காணப்பட்ட ஒவ்வொரு இடருக்குமான மிகப் பொருத்தமான இடர் தணிப்பு நுட்பங்களையும் **இனங்காண்க.** (05 புள்ளிகள்)

## வினா 03

முத்தரப்பு உறவுமுறையானது உறுதிப்பாட்டு ஈடுபடுத்தலொன்றின் ஐந்து மூலகங்களில் ஒன்றாகும். பொறுப்புவாய்ந்த தரப்பினர் (responsible party), பயனர் (user) மற்றும் பயிற்சியாளர் (practitioner) என்பவர்களே இந்த மூன்று தரப்பினரும் ஆவர்.

**நீங்கள் செய்ய வேண்டியது :**

இந்த மூன்று தரப்பினருக்கும் உரிய வகிபாகங்களையும் அவர்கள் ஒருவருக்கொருவர் எவ்வாறு தொடர்பு படுகின்றனர் என்பதையும் **விபரிக்குக.** (05 புள்ளிகள்)

## வினா 04

நிறுவனமானது நிறுவன மட்டத்திலும் தனித்தனிக் கணக்காய்வு மட்டத்திலும் தரக் கட்டுப்பாட்டு முறைமை ஒன்றைத் தாபித்துப் பராமரித்தல் வேண்டும்.

**நீங்கள் செய்ய வேண்டியவை :**

(a) தரக் கட்டுப்பாட்டு முறைமையின் ஒரு மூலகம் (element) என்ற வகையில் நிறுவனத்தினுள் தரத்திற்கான தலைமைத்துவப் பொறுப்புகளை **விபரிக்குக.** (03 புள்ளிகள்)

(b) தனித்தனிக் கணக்காய்வு ஈடுபடுத்தல் மீதான மேற்பார்வையின் கீழ் கவனத்தில் கொள்ளப்பட வேண்டிய இரண்டு (02) விடயங்களைக் **குறிப்பிடுக.** (02 புள்ளிகள்)

(மொத்தம் 05 புள்ளிகள்)

*பகுதி A முடிவு*

## பகுதி B

(மொத்தம் 30 புள்ளிகள்)

### வினா 05

**வரையறுக்கப்பட்ட ஸ்டார் லங்கா (தனியார்) கம்பனி** (“கம்பனி”) சவர்க்காரங்களைத் தயாரிப்பதில் ஈடுபடுவதுடன் அதனை மேல் மற்றும் மத்திய மாகாணங்களில் உள்ள விற்பனைப் பிரதிநிதிகள் ஊடாக விநியோகம் செய்கிறது. கம்பனியானது மூலப்பொருள்களை இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்வதுடன், சில பொருள்களை உள்நாட்டுச் சந்தையிலிருந்து கொள்வனவு செய்கிறது. 76 ஊழியர்கள் தொழிற்சாலையில் பணியாற்றுவதுடன் 12 பேர் களஞ்சியப் போக்குவரத்து அலகிலும் 5 பேர் கணக்குகள் பிரிவிலும் பணியாற்றுகின்றனர்.

நாட்டில் நிலவிய நோய்த் தொற்று நிலைமை காரணமாக, 2020 இல் கம்பனி கூட்டிணைக்கப்பட்ட திலிருந்து வெளிவாரியான கணக்காய்வுகள் எதுவும் முன்னெடுக்கப்படவில்லை.

கம்பனியின் முகாமைத்துவப் பணிப்பாளரான **அஹமட்,** கம்பனியின் வெளிவாரியான கணக்காய்வினை மேற்கொள்வதற்கு உங்களுடைய பட்டயக் கணக்காளர் நிறுவனத்திடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

சிரேஷ்ட கணக்காய்வாளர் என்ற ரீதியில், இந்த வகையான ஈடுபடுத்தல்களுக்கு பல வழிகளிலும் போதுமானளவு திட்டமிடல் தேவை என்பதை நீங்கள் அறிவீர்கள். மேலும், பொருண்மை பிறழ்கூற்றுக்களின் இடர்களை மதிப்பிடுவதற்கு நிறுவனம் மற்றும் அதன் சூழல் பற்றிய புரிதலை கணக்காய்வாளர் பெற்றுக் கொள்ள வேண்டும் என்பது பற்றியும் நீங்கள் அறிவீர்கள்.

**நீங்கள் செய்ய வேண்டியவை :**

(a) கணக்காய்வின் போதுமானளவு திட்டமிடலின் மூலம் கணக்காய்வாளர் பெற்றுக்கொள்ளக்கூடிய மூன்று (03) நன்மைகளை **இனங்காண்க.** (03 புள்ளிகள்)

(b) கணக்காய்வாளர் **வரையறுக்கப்பட்ட ஸ்டார் லங்கா (தனியார்) கம்பனி** பற்றிய புரிதலைப் பெற்றுக் கொள்ள வேண்டிய மூன்று (03) பகுதிகளை (areas) **குறிப்பிடுக.** (03 புள்ளிகள்)

(c) கணக்காய்வாளர் தற்போதைய கணக்காய்வு ஈடுபடுத்தலின் ஆரம்பத்தில் ஆற்ற வேண்டிய இரண்டு (02) ஆரம்பகட்ட (பூர்வாங்க) ஈடுபடுத்தல் நடவடிக்கைகளை **விவரிக்குக.** (04 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

### வினா 06

**ஆதர் சில்வா அன்ட் கோ** (ஒரு பட்டயக் கணக்காளர் நிறுவனம்) **Bell PLC** இன் கணக்காய்வாளராக இருக்கும்போது, அதன் கணக்காய்வுத் திட்டத்தை கணக்காய்வுக் குழுவுக்குச் சமர்ப்பித்தது. “மோசடிகளை” கண்டறிவதற்கு கணக்காய்வாளரே பொறுப்பு எனக் கூறிய கணக்காய்வுக் குழுவின் தலைவர் கம்பனியில் மோசடிகளைக் கண்டறிவதில் கணக்காய்வாளரின் அணுகுமுறை பற்றி விசாரித்தார்.

கணக்காய்வை மேற்கொள்ளும் நிலை தொடங்கியபோது, கணக்காய்வாளர் **Bell PLC** இன் கணக்காய்வை மேற்கொள்வதில் இலத்திரனியல் - கணக்காய்வுக் (e-audit) கருவியொன்றைப் பயன்படுத்தினார். இலத்திரனியல் - கணக்காய்வுக் கருவிகள் “ஆளுகை பாரப்படுத்தப்பட்டோருடனான (TCWG)” தொடர்பாடலின் ஆவணப்படுத்தலுக்குத் தேவையான கணக்காய்வின் பல்வேறு மட்டங்களில் பல்வேறு வார்ப்புருக்களை (templates) கொண்டிருந்தன. கணக்காய்வு அணியானது ஆளுகை பாரப்படுத்தப் பட்டோருடன் கலந்துரையாடப்பட்ட விடயங்களை ஆவணப்படுத்தியிருந்தது.

**நீங்கள் செய்ய வேண்டியவை :**

(a) நிறுவனமொன்றின் மோசடிகளைக் கண்டறிவதிலும் தடுப்பதிலும் கணக்காய்வாளரின் பொறுப்பினை **விபரிக்குக.** (04 புள்ளிகள்)

(b) மோசடி மீதான கணக்காய்வு இடரைக் குறைப்பதற்கு கணக்காய்வாளரால் பின்பற்றப்பட வேண்டிய இரண்டு (02) நடைமுறைகளை **இனங்காண்க.** (02 புள்ளிகள்)

(c) கணக்காய்வை நடத்தும்போது ஆளுகை பாரப்படுத்தப்பட்டோருடன் தொடர்பாடப்பட வேண்டிய இரண்டு (02) பகுதிகளை (areas) **விபரிக்குக.** (04 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

## வினா 07

**பீட்டர்ஸ் அன்ட் கோ** என்பது ஒரு தனி பங்காளரான **பியால் பீட்டர்ஸ்,** ஒரு முகாமையாளர் மற்றும் 20 கணக்காய்வு பயிற்சியாளர்கள் ஆகியோரைக் கொண்ட ஒரு கணக்காய்வு நிறுவனமாகும். தமது கணக்காய்வாளராக நியமனத்தை ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டு **றிலையபில் பீ.எல்.சீ. (RPLC)** நிறுவனம் இந்தக் கணக்காய்வு நிறுவனத்தை அணுகியிருந்தது. **RPLC** என்பது பெரிய அளவிலான ஆயுள் காப்புறுதிக் கம்பனி ஒன்றாகும். கணக்காய்வு நிறுவனத்தின் முகாமையாளர் என்ற ரீதியில், கணக்காய்வு ஈடுபடுத்தலை ஏற்றுக் கொள்வதற்கு முன்னர் சில முக்கியமான தகவல்களை நீங்கள் திரட்டியுள்ளீர்கள்.

ஏற்றுக்கொள்ள முடியாத கணக்கீட்டு நடைமுறைகள் மற்றும் குறிப்பிடத்தக்களவான வழுத் திருத்தங்கள் காரணமாக முந்தைய ஆண்டிற்கான **RPLC** இன் கணக்காய்வு செய்யப்பட்ட நிதிக் கூற்றுக்கள் மீளளிக்கப்பட்டுள்ளன (re-issued) என கொழும்பு பங்குப் பரிவர்த்தனை நிலைய இணையத்தளத்தில் பிரசுரிக்கப்பட்டுள்ளது. இலங்கை கணக்கீட்டு மற்றும் கணக்காய்வு நியமங்கள் கண்காணிப்புச் சபையும்கூட **RPLC** இனால் தங்களுக்கு வழங்கப்படுகின்ற தவறான தகவல்கள் தொடர்பில் நடப்பு ஆண்டின் காலப்பகுதியில் ''எச்சரிக்கைக் கடிதமொன்றை'' வழங்கியுள்ளது. மேலும், இது போன்ற பிற ஆயுள் காப்புறுதி கம்பனிகளுடன் ஒப்பிடும்போது இந்தக் கம்பனியின் நிகர இலாப எல்லையானது மிகவும் உயர்வாக இருக்கிறது.

கணக்காய்வுச் சேவைநாடுநராக **RPLC** இன் கணக்காய்வு ஈடுபடுத்தலை ஏற்றுக்கொள்வது தொடர்பில் உமது ஆலோசனையை கணக்காய்வுப் பங்காளர் கேட்டிருக்கிறார்.

**நீங்கள் செய்ய வேண்டியவை :**

(a) **RPLC** இன் கணக்காய்வு ஈடுபடுத்தலை ஏற்றுக் கொள்வது தொடர்பில் நீங்கள் கவனத்திற் கொள்கின்ற மற்றும் பங்காளருடன் தொடர்பாடுகின்ற மூன்று (03) விடயங்களை **ஆராய்க.** (06 புள்ளிகள்)

(b) ஒரு புதிய கணக்காய்வுச் சேவைநாடுநரை ஏற்றுக் கொள்வதில் தொழில்சார் திறமைகள் மற்றும் உரிய கவனம் (due care) என்பவற்றிற்கான அச்சுறுத்தல்கள் தொடர்பில் கணக்காய்வாளர் ஒருவருக்குக் கிடைக்கக்கூடிய நான்கு (04) பாதுகாப்புகளை **விபரிக்குக.** (04 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

*பகுதி B முடிவு*

# <u>பகுதி C</u>

(மொத்தம் 50 புள்ளிகள்)

## வினா 08

சில ஆண்டுகளாக துபாய் நாட்டிலுள்ள ஒரு தனியார் வைத்தியசாலையில் பணியாற்றியதன் பின்னர், **வைத்தியர் ரொஷான்** கடந்த ஆண்டு இலங்கைக்குத் திரும்பியிருந்தார். 2021 டிசெம்பரில், மருந்தகங்களைக் கொண்ட சங்கிலித் தொடரொன்றை இயக்குவதற்காக **வரையறுக்கப்பட்ட ஒசு மெதுர (தனியார்) கம்பனி** என்ற பெயரில் பொறுப்பு வரையறுக்கப்பட்ட தனியார் கம்பனியொன்றைத் தாபித்ததுடன் மஹரகம, நுகேகொடை மற்றும் அவிசாவளை ஆகிய இடங்களில் மூன்று மருந்தகங்களையும் நிறுவியுள்ளார்.

மஹரகம கிளையானது பிரதான கிளையாக இருப்பதுடன் அது கொள்வனவு மற்றும் வழங்குநர்களின் கொடுப்பனவுகளைக் கையாள்கிறது. சகல மூன்று கிளைகளும் இருப்பு நிகழ்நிலைப்படுத்தலுக்காக (stock update) மிகவும் நம்பகரமானதும் சகல தகவல்களும் கிடைக்கின்றதுமான தனிப் பயனாக்கப்பட்ட மென்பொருள் ஒன்றைப் பயன்படுத்துகின்றன. **வைத்தியர் ரொஷான்** தனது கணினியின் ஊடாக இருப்பு மீதியைப் பரிசோதித்து, பொருள்களை கட்டளை (order) செய்ய முடியும். அவர், மருந்தக பாடநெறியைப் பூர்த்தி செய்தவரும் பல ஆண்டுகளாக மருந்தாளர் ஒருவராக பணியாற்றியவருமான **கல்பனா** என்பவரை ஆட்சேர்ப்புச் செய்துள்ளார். **கல்பனா** சகல பொருள் பெறுவனவுக் குறிப்புகளையும் இருப்புத் தொகுதியில் (stock module) பதிவு செய்கிறார்.

வழங்குநர்களைத் தெரிவு செய்தல், பொருள்களுக்கு கட்டளை (ஓடர்) செய்தல் மற்றும் வழங்குநர்களது விலைப்பட்டியலின் அடிப்படையில் காசோலைகளை எழுதுதல் என்பவற்றை **வைத்தியர் ரொஷானே** மேற்கொள்கிறார். எந்தக் கிளையிலும் கடனுக்கு பொருள்கள் விற்கப்படுவதில்லை. சேகரிக்கப்படும் மொத்தத் தொகையும் CDM இயந்திரத்தைப் பயன்படுத்தி அந்தந்த நாளின் இறுதியில் காசாளரால் வங்கியில் வைப்புச் செய்யப்படுகிறது. நாணயக்குற்றிகள் வேறான இழுப்பறை (இலாச்சி) ஒன்றில் வைத்துப் பேணப்படுகின்றன.

அண்மையில் உங்களுடைய கணக்காய்வு நிறுவனத்தை அணுகிய **வைத்தியர் ரொஷான்,** அவரது கம்பனிக்கான நிதிப் பிரிவை அமைப்பதற்கு தனக்கு உதவுமாறு கோரிக்கை விடுத்துள்ளார். அவர் கணக்காளருடைய வேலைகளில் ஈடுபடுகிறார் என்ற போதிலும், அதிகரித்த வணிக நடவடிக்கைகளைக் கையாளும் திறன் அவரிடம் இல்லை என்பதை நீங்கள் புரிந்து கொண்டுள்ளீர்கள். கம்பனி சம்பளங்களை வழங்குவதற்கு போதுமானளவு இலாபங்களை ஈட்டுவதால், இருக்கின்ற மென்பொருள் பொதியின் ஊடாக அனைத்தையும் கண்காணிப்பதற்கும் அவருடைய ஈடுபாடு இன்றி செயற்பாடுகளைக் கையாள்வதற்கும் அவர் விரும்புகின்றார்.

மேலும், **வைத்தியர் ரொஷான்** ''கட்டுப்பாட்டுச் சூழல்'' பற்றி உங்களிடம் விசாரித்துள்ளார்.

**நீங்கள் செய்ய வேண்டியவை :**

(a) **வரையறுக்கப்பட்ட ஒசு மெதுர (தனியார்) கம்பனியின்** உள்ளகக் கட்டுப்பாட்டுப் பலவீனங்கள் நான்கினை (04) **அடையாளங் காண்க.** (04 புள்ளிகள்)

(b) ''உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமை'' பற்றி **வைத்தியர் ரொஷானுக்கு விபரிக்குக.** (04 புள்ளிகள்)

(c) கட்டுப்பாட்டுச் சூழலின் ஏதாவது ஐந்து (05) மூலகங்களைக் (elements) **குறிப்பிடுக.** (05 புள்ளிகள்)

(d) **வரையறுக்கப்பட்ட ஒசு மெதுர (தனியார்) கம்பனி**க்குத் தேவையான பிரதான வணிகச் செயன்முறைகள் மூன்றினை (03) **விபரிக்குக.** (06 புள்ளிகள்)

(e) **வரையறுக்கப்பட்ட ஒசு மெதுர (தனியார்) கம்பனி** கவனத்தில் கொள்ளக்கூடிய மூன்று (03) பிரயோகக் கட்டுப்பாடுகளை ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொரு உதாரணத்துடன் **அடையாளங்காண்க.**

(06 புள்ளிகள்)

(மொத்தம் 25 புள்ளிகள்)

## வினா 09

**Toys PLC (TPLC)** ஆனது பொம்மைகளை இறக்குமதி செய்து மொத்த விற்பனையில் ஈடுபடும் ஒரு நிறுவனமாகும். நாட்டில் நிலவுகின்ற தற்போதைய பாதகமான நிலைமை காரணமாக, வீட்டிலிருந்து வேலை செய்வதற்கான ஏற்பாடுகள் நடைமுறைப்படுத்துவதால், **TPLC** இன் உள்ளகக் கட்டுப்பாடுகள் பயனுறுதிமிக்க வகையில் செயற்படுத்தப்படுவதில்லை. விற்பனைகள், விற்பனைப் பணிசை (தரகு) வியாபார கடன்பட்டோர் மற்றும் தொக்குகள் தொடர்பான பூர்வாங்க பகுப்பாய்வு மீளாய்வை (PAR) மேற்கொண்டபோது, ஏற்ற - இறக்கங்களைக் கொண்ட தொடர்புகள் இனங்காணப்பட்டிருந்ததுடன் அவை பற்றி முகாமையுடன் கலந்துரையாடப்பட்டன.

இலங்கை அரசாங்கத்தினால் விதிக்கப்பட்ட இறக்குமதிக் கட்டுப்பாடுகள் காரணமாக ஆண்டின் காலப்பகுதியில் **TPLC** ஆனது இறக்குமதியை மேற்கொள்ளக்கூடிய நிலையில் இருக்கவில்லை. **TPLC** இனால் எடுக்கப்பட்ட ஒரு வருட இறக்குமதிக் கடன்கள் ஆண்டின் காலப்பகுதியினுள் காணப்பட்டது எனினும் **TPLC** இனால் நிலுவைத் தொகைகளை தீர்ப்பனவு செய்ய இயலவில்லை. வங்கி, காலப்பகுதியை நீடிப்பதற்குத் தயாராக இல்லை.

**TPLC** குறைந்தளவு வழங்குநர்களை மாத்திரமே கொண்டிருக்கிறது எனினும், இறக்குமதி கடன்கொடுத்தோருக்கான தொகைகளை தீர்ப்பனவு செய்வதற்கு **TPLC** சிரமப்படுகின்ற அதே வேளை கடன் கொடுத்தோர் தீர்ப்பனவு செய்யப்படாமலிருக்கும் மேலதிக நிலுவை மீதிகளுக்கு அபராத (தண்டம்) வட்டி விதிக்கப்படும் என அறிவித்துள்ளனர். வியாபாரக் கடன் கொடுத்தோரிடமிருந்து எதிர்மறையான மூன்றாம் தரப்பு உறுதிப்படுத்தல்களுக்கு கணக்காய்வாளர் அழைப்பு விடுத்துள்ளார். இது வியாபாரக் கடன் கொடுத்தோருக்கான தனிக் கணக்காய்வு நடைமுறையாக இருந்தது.

கடன்பட்டோர் அவற்றைத் தீர்ப்பனவு செய்வதற்கு நீண்ட காலம் எடுப்பதுடன், வாடிக்கையாளர்களில் சிலர் அவர்களுடைய செயற்பாடுகளை மூடியுள்ளனர் என சந்தைப்படுத்தல் பிரிவானது நிதிப் பிரிவுக்கு அறிவித்திருக்கிறது. சட்டநியதிக் கணக்காய்வின்போது, பொருண்மை பிறழ்கூற்றுக்களின் இடர் உயர்வாக இருக்குமென தீர்மானிக்கப்பட்டதால் வியாபாரக் கடன்பட்டோரிடமிருந்தான வெளிவாரியான உறுதிப்படுத்தல்களுக்காக கணக்காய்வாளர் அழைப்பு விடுத்துள்ளார்.

நிதிக் கூற்றுகள், தொடர்ந்தியங்கும் என்ற எடுகோளைப் பயன்படுத்தி **TPLC** இனால் தயாரிக்கப்படுகின்றன. எவ்வாறாயினும், தொடர்ந்தியங்கும் என்ற எடுகோள் பற்றிய கணக்காய்வாளரின் மதிப்பீடானது, தொடர்ந்தியங்கும் என்ற எடுகோளைப் பயன்படுத்துவது பொருத்தமற்றது எனவும் நிதிக் கூற்றுக்கள் தொடர்ந்தியங்காது என்ற எடுகோளைப் பயன்படுத்தி தயாரிக்கப்பட வேண்டும் எனவும் சுட்டிக் காட்டுகிறது. அவ்வாறில்லை எனின், மாற்றப்பட்ட அபிப்பிராயமொன்று வெளிப்படுத்தப்படும். **TPLC** ஆனது நிதிக் கூற்றுக்களை மாற்ற வேண்டாம் எனவும் ஏனைய விடயப் பந்தி அல்லது வலியுறுத்தல் விடயப் பந்தியில் உள்ளடக்குமாறும் கணக்காய்வாளரைக் கோரியுள்ளது.

**நீங்கள் செய்ய வேண்டியவை :**

(a) கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக் கொள்வதற்கு வெளிவாரியான உறுதிப்படுத்தல் தவிர்ந்த, வேறு மூன்று (03) வகையான கணக்காய்வு நடைமுறைகளை **விபரிக்குக.** (06 புள்ளிகள்)

(b) எதிர்மறையான உறுதிப்படுத்தல் கோரிக்கை என்பதால் கருதப்படுவது யாதென **விபரிக்குக.** (02 புள்ளிகள்)

(c) **TPLC** இனுடைய நிதித் தகவல்களை ஒப்பீடு செய்யும்போது கணக்காய்வாளரால் முன்னெடுக்கப்படக் கூடிய இரண்டு (02) பகுப்பாய்வு நடைமுறைகளை **அடையாளங் காண்க.** (02 புள்ளிகள்)

(d) தொடர்ந்தியங்கும் என்ற எடுகோள் பற்றிய சந்தேகத்தை ஏற்படுத்தக்கூடிய ஐந்து (05) நிகழ்வுகள் மற்றும் நிலைமைகளை **அடையாளங் காண்க.** (05 புள்ளிகள்)

(e) வலியுறுத்தல் விடயப் பந்தி தொடர்பான தேவைகளைக் கவனத்திற் கொண்டு, கம்பனியால் செய்யப்பட்ட கோரிக்கையை **மதிப்பிடுக.** (04 புள்ளிகள்)

(f) **TPLC** இன் நிதிக் கூற்றுக்கள் மீது தகைமைபெற்ற அபிப்பிராயமொன்றை வழங்குவதன் பொருத்தப்பாட்டுத்தன்மை அல்லது பொருத்தமற்றதன்மையை **விபரிக்குக.** (06 புள்ளிகள்)

(மொத்தம் 25 புள்ளிகள்)

*பகுதி C முடிவு*

# செயல் வினைச்சொல் செவ்வை நிரல்

| ஆற்றல் மட்டம் | விபரம் | செயல் வினைச்சொல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|---|
| **அறிவு (1)** | விடயங்களையும் அடிப்படை எண்ணக் கருக்களையும் ஞாபகப்படுத்தல் | **வரைக (Draw)** | வரைபடம் அல்லது வரிப்படமொன்றைச் சமர்ப்பித்தல் |
| | | **தொடர்புபடுத்துக (Relate)** | தர்க்கரீதியாக அல்லது காரணரீதியாக தொடர்புகளைத் தாபித்தல் |
| | | **கூறுக/ குறிப்பிடுக(State)** | திட்டவட்டமாக அல்லது தெளிவாக விபரங்களை வெளிப்படுத்தல் |
| | | **அடையாளங்காண்க / இனங்காண்க (Identify)** | கருத்திற்கொண்ட பின்னர் ஏற்பிசைவு செய்தல், தாபித்தல் அல்லது தெரிவுசெய்தல் |
| | | **நிரற்படுத்துக / பட்டியலிடுக (List)** | தொடர்புபட்ட உருப்படிகளை ஒன்றன்கீழ் ஒன்றாக எழுதுதல் |

| ஆற்றல் மட்டம் | விபரம் | செயல் வினைச்சொல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|---|
| **முற்றடக்கம் (2)** | யோசனைகள் மற்றும் தகவல்களை விபரித்தலும் தெளிவுபடுத்தலும் | **ஏற்பிசைவு செய்க (Recognize)** | அறிவு அல்லது சூழ்நிலை அனுபவத்தைப் பயன்படுத்தி செல்லுபடித்தன்மையை அல்லது அதன் இயலாமையைக் காட்டுதல் |
| | | **பொருள் விளக்குக / கருத்துக்கூறுக(Interpret)** | விளங்கக்கூடிய அல்லது பரிச்சயமான பதங்களில் தெளிவுபடுத்தல் |
| | | **விளக்குக (Describe)** | பிரதான அம்சங்களை எழுதுதலும் தொடர்பாடுதலும் |
| | | **விபரிக்குக (Explain)** | உரிய விடயங்களைப் பயன்படுத்தி தெளிவான விவரணத்தை விபரமாகத் தெரிவித்தல் |
| | | **பொருள் வரையறை செய்க / வரைவிலக்கணப்படுத்துக(Define)** | சரியான தன்மை, நோக்கு அல்லது பொருளைத் தருதல் |

| ஆற்றல் மட்டம் | விபரம் | செயல் வினைச்சொல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|---|
| **பிரயோகம் (3)** | புதிய சூழ்நிலைகளில் அறிவைப் பயன்படுத்தலும் பின்பற்றலும் | **கணக்கிணக்கம் செய்க / இணக்கம் செய்க(Reconcile)** | வேறொன்றுடன் ஒத்திருப்பதை / பொருந்தியிருப்பதை ஒப்புவித்தல் |
| | | **வரைக (Graph)** | வரைபுகள் மூலம் குறித்துக்காட்டுதல் |
| | | **மதிப்பிடுக (Assess)** | பெறுமதி, தன்மை, இயலுமை அல்லது தரத்தினைத் தீர்மானித்தல் |
| | | **தீர்க்குக (Solve)** | கணிப்பீடுகள் அல்லது விளக்கங்கள் ஊடாக தீர்வைக் கண்டுபிடித்தல் |
| | | **தயாரிக்குக (Prepare)** | குறித்த நோக்கத்திற்காக உரிய முறையில் தயார்படுத்தல் |
| | | **எடுத்துக்காட்டுடன் விவரிக்குக (Demonstrate)** | உதாரணங்களுடன் நிறுவுதல் அல்லது வெளிக்காட்டல் |
| | | **கணிக்குக / கணிப்பிடுக (Calculate)** | கணிதரீதியான கணிப்பீட்டுடன் கண்டறிதல் அல்லது கணித்தல் |
| | | **பிரயோகிக்குக (Apply)** | நடைமுறைப் பயன்பாட்டிற்குக் கொண்டுவருதல் |

| ஆற்றல் மட்டம் | விபரம் | செயல் வினைச்சொல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|---|
| **பகுப்பாய்வு (4)** | யோசனைகளுக் கிடையிலான தொடர்புகளை எழுதுதலும் பிரசினங்களைத் தீர்த்தலும் | **தொடர்பாடுக(Communicate)** | தகவல்களைப் பகிர்தல் அல்லது பரிமாறுதல் |
| | | **சுருக்கமாகக் குறிப்பிடுக(Outline)** | முக்கிய அம்சங்களின் தொகுப்பினைத் தருதல் |
| | | **வேறுபடுத்துக (Contrast)** | வேறுபாடுகளைக் காட்டுவதற்காக ஆய்வுசெய்தல் |
| | | **ஒப்பிடுக (Compare)** | ஒற்றுமைகளை அறிவதற்காக ஆய்வுசெய்தல் |
| | | **கலந்தாய்வு செய்க / ஆராய்க (Discuss)** | விவாதிப்புகள் மூலம் விபரமாக ஆய்வுசெய்தல் |
| | | **வித்தியாசப்படுத்துக / வகையிடுக (Differentiate)** | சிலவற்றை வேறுபடுத்துகின்ற வித்தியாசங்களைக் காட்டுதல் |
| | | **பகுப்பாய்வு செய்க (Analyze)** | தீர்வினை அல்லது பேறினை கண்டுபிடிப்பதற்காக விபரமாக ஆய்வுசெய்தல் |